இதனைச் செய்வதில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

10. அமைச்சர் விளக்க உரை

நகராட்சி மன்ற தேர்தல்கள் குறித்து.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. துரைசாமி): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விதி 82 (1) ன் கீழ் ஒரு அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நகராட்சி மன்றத் தேர்தல்கள் பற்றி ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் நடைபெறவிருந்த நகராட்சி மன்றத் தேர்தல்கள், முதலமைச்சர் அண்ணா அவர்களின் உடல் நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டன. தேர்தல்களை ஏப்ரல் மாதம் கடைசி வாரத்தில் நடத்த இப்பொழுது அரசு முடிவு செய்துள்ளது. இவை இரண்டு கட்டங்களில் நடைபெறும்.

கீழே குறிப்பிட்டிருக்கக்கூடிய 9 நகராட்சி மன்றங்களில் ரிட் மனு அல்லது ரிட் அப்பீல் மனு உயர்நீதி மன்றத்தின் விசாரணையில் இருப்பதால் அவற்றிற்கு தற்சமயம் தேர்தல்கள் நடத்த இயலாது :—

(1) கோயம்புத்தூர்.
(2) திருச்சிராப்பள்ளி.
(3) அருப்புக்கோட்டை.
(4) வாணியம்பாடி.
(5) திருவண்ணாமலை.
(6) திருப்பூர்.
(7) மாயூரம்.
(8) நாகப்பட்டினம்.
(9) தேனி.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திண்டுக்கல் நகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரையில் உயர் நீதி மன்றத்தின் உத்தரவின் மேல் அப்பீல் செய்வது பற்றி அரசாங்கத்தில் ஆலோசனையில் இருக்கிறது. ஆகவே திண்டுக்கல் நகராட்சிக்கும் தற்சமயம் தேர்தல் நடத்த இயலாது.

தற்போதைய நகராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 28-2-1969 பகல் பன்னிரெண்டு மணியுடன் முடிவுபெறும். அவற்றை 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதி பகல் பன்னிரெண்டு மணி வரை நீடிக்க அரசு முடிவு செய்திருக்கிறது. புதிய நகராட்சி மன்றங்கள் 28-4-1969-ம் தேதியன்று பகல் 12 மணிக்கு தொடங்கும். ஆனால் மேலே குறிப்பிட்டுள்ள 10 நகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்த இயலாதபடியால் அந்த நகராட்சி மன்றங்கள் 28-4-1969க்குப் பின்னர் தனி அதிகாரிகளின் பொறுப்பில் இயங்கி வரும்.

1969 பிப்ரவரி 24] [திரு. மா. முத்துசாமி]

நகராட்சி மன்றத் தேர்தல்கள், இரண்டு கட்டங்களில் ஏப்ரல் மாதம் 24, 26-ம் தேதிகளில் நடைபெறும்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நகராட்சித் தேர்தல்களை ஒத்தி வைப்பதன் காரணமாக இதே நகரசபைகள் இயங்குமோ அல்லது தனி அதிகாரிகள் இருப்பார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதி பகல் பன்னிரெண்டு மணி வரை இப்போதிருக்கக்கூடிய நகராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் நீடிக்கும்.

8. ஆளுநரின்பேருரை மீது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. எம். சுரேந்திரன்** : தலைவர் அவர்களே, இன்று ஆளுநர், அவர்களின் உரைமீது பேசுகிறபோது கடந்த இரண்டு உரைகளின் மீது பேசியது எனக்கு நினைவிற்கு வருகிறது. அப்பொழுது அன்புடனும், ஆதரவுடனும், உன்னிப்பாகவும் இங்கு பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்த முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் இன்று இல்லையே என்று நினைத்து மிகவும் வேதனையான உள்ளத்துடன் பேசுகிறேன். அன்று இரண்டு தடவை பேசும்போதும் ஜனநாயகத்தைப் பற்றியும் ஜனநாயகம் செயல்படவேண்டிய விதத்தைப் பற்றியும் பேசினேன். இன்றைக்கு அம்மாதிரியான காரியங்களைப் பற்றி பேசுவதை விட்டு என் தொகுதி பற்றி பேசுவதற்கே நான் அதிகமாக விரும்புகிறேன். இன்று ராஜ்யத்தில் பல பகுதிகளில் உள்ள நிலைமை, தண்ணீர் பற்றாக்குறை, குடிதண்ணீர் கிடைக்கவில்லையே என்ற நிலைதான் தோன்றி இருக்கிறது. என் தொகுதியைப் பொருத்தவரையில், மேட்டூரைப் பொருத்தவரையில் அங்கு குடிதண்ணீர் புதிதாகத் தேவைப்படுகிறது என்பதோடு அங்கு ஏற்பட்டு இருக்கிற புதுத் தொழிற்சாலைகள் காரணமாக குடி தண்ணீர் கெட்டு விட்டிருக்கிற இடங்களில் குடி-தண்ணீர் இல்லாமல் இரண்டு ஆண்டுகளாக மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அங்கு தொழிற்சாலைகள் ஏற்பட்டதற்கு பின்னர் பி.என். பட்டி பஞ்சாயத்தைச் சார்ந்த கிராமங்களில் உள்ள கிணறுகள் எல்லாம் கெட்டு விட்டன. வீரக்கல்புதூர் பஞ்சாயத்தில் உள்ள கிராமங்களிலும் குடிநீர் கெட்டுவிட்டது. இந்த குடி தண்ணீருக்காக பல்வேறுவிதமான கிளர்ச்சிகள், பல்வேறு விதமான போராட்டங்கள், பல்வேறு விதமான விண்ணப்பங்கள், முறையீடுகள் இவ்வளவு நடந்ததற்குப் பின்னும் கூட அந்த ஊர் மக்களுக்கு இன்னும் குடி தண்ணீர் கிடைக்க வழி ஏற்படாமல் இருப்பது வேதனைக்குரியதாகும் என்பதை இங்கு கூறிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மற்றப் பகுதிகளைப் போல் அல்லாமல் மேட்டூர் பகுதி ஒரு விசேஷமான நிலையில் இருக்கிறது. மேட்டூர் அணை கட்டுகிற காலத்தில் அதற்கு அருகாமையில் உள்ள நிலங்களை பொதுப்பணித் துறை இலாகா நஷ்டயீடு அளித்து தனிப்பட்டவர்களிடம் இருந்து வாங்கிக்கொண்டது. ஆனால் அணை கட்டி